**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102073

1. District : மாவட்டம் வேலூர் | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2018 | FIR No: மு.த.அ. எண் 03/2018 | Date: நாள் 07/02/2018

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act சட்டம்: PC Act 1988 | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் November 2017 | Date to : நாள் வரை 02-02-2018
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05-02-2018 | Time நேரம் : 1200 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I | Time நேரம் : 05-02-18 @ 1200 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — ஆம்பூர் சுமார் 52 km மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் ஆம்பூர் உட்கோட்டம், வேலூர் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. பன்னீர்செல்வம் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சாமிநாதன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 41/2018 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - | Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் செயலர் [illegible] | (g) Address : முகவரி எண் 6 லட்சுமி நகர், சாணாங்குப்பம் ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு. தங்கராஜ், துணை காவல் கண்காணிப்பாளர், ஆம்பூர் உட்கோட்டம் வேலூர் மாவட்டம் (2) திரு. சுந்தர ஜெயராஜ், உதவி ஆய்வாளர், ஆம்பூர் நகர காவல் நிலையம், வேலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - [illegible] தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாள்கள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..........—.......... Rank ..........—.......... to take up the Investigation / Refused Investigation / transferred to PS......—......on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..........—.......... பதவி ..........—.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..........—.......... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 7/02/2018.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07/02/18. @ 20.15 hrs.

Name: பெயர் S. VIJAYALAKSHMI
Rank: நிலை காவல் ஆய்வாளர்
[illegible]

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**பணிந்து அனுப்பப்படுகிறது:** வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 05.02.2018-ம் தேதி காலை 12.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திரு.பன்னீர்செல்வம் (எ) ராஜ், வயது.41/2018, த/பெ.சாமிநாதன், எண்.6, லக்ஷ்மி நகர், சாணாங்குப்பம் ஆம்பூர், வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று பார்க்க, தான் ஆம்பூரில் உள்ள பெரியாங்குப்பம் மற்றும் சாணாங்குப்பம் ஆகிய இடங்களில் செங்கல் சூளை வைத்து நடத்தி வருவதாகவும், தன்னிடம் TN 37 BU 1612, TN 72 BB 2764 ஆகிய பதிவு எண் உள்ள இரண்டு லாரிகளும் TN 23 BU 4219 என்ற டிராக்டர் ஒன்றும் உள்ளதாகவும், தான் கடந்த 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டில் வேலூர் மாவட்டத்தில் உள்ள மாதனூர், கந்தனேரி மற்றும் வாலாஜா ஆகிய இடங்களில் உள்ள அரசின் உரிமம் பெற்ற மணல் குவாரியில் இருந்து முறையாக அரசு நிர்ணயம் செய்த பணம் யூனிட் ஒன்றுக்கு ரூ.2,000/- வீதம் 3 யூனிட் மணலுக்கு உரிய பணத்தை கட்டி பில்போட்டு மணல் எடுத்து அதனை தன்னுடைய லாரியில் ஏற்றி ஆம்பூர் சுற்றுவட்டார பகுதிகளுக்கு எடுத்து சென்று வியாபாரம் செய்து வந்ததாகவும், தன்னைப் போலவே ஆம்பூர் பகுதியை சேர்ந்த சுதாகர் த/பெ.முத்து, சுரேஷ் (எ) சின்னபையன் த/பெ.தானிவேல், ஜெயபால் த/பெ.தேவராஜ், சேகர் த/பெ.பெருமாள் மற்றும் பாபு ஆகியவர்களும் மணல் குவாரிகளில் இருந்து மணல் ஏற்றி சென்று வியாபாரம் செய்துவந்தோம் என்றும், தாங்கள் அனைவரும் மணல் விற்பனை செய்யும் தொழில் செய்துவந்த நிலையில் கடந்த 1 வருடமாக அரசு மணல் குவாரிகளை மூடிவிட்டதால் தாங்கள் அந்த தொழிலை நிறுத்திவிட்டோம் என்றும், தான் நடத்தி வரும் செங்கல் சூளையில் இருந்து செங்கற்களை தன்னுடைய லாரியில் ஏற்றி வியாபாரம் செய்து வருவதாகவும், அதேபோல் மற்றவர்களும் அவர்களுடைய லாரிகளை அவர்களுடைய சொந்த தொழிலுக்காக உபயோகப்படுத்தி கொண்டிருப்பதாகவும், ஆனால் சுமார் 8 மாதங்களாக ஆம்பூர் டி.எஸ்.பியாக உள்ள திரு.தன்ராஜ் என்பவர் ஆம்பூர் டவுன் போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் என்பவர் மூலம் கடந்த நவம்பர் மாதம் 2017 முதல் தங்களிடம் நீங்கள் ஏற்கனவே மணல் வியாபாரம் செய்து வந்துள்ளீர்கள் இப்போது நிறுத்திவிட்டீர்கள் என்றால் நம்ப முடியாது அதனால் நீங்கள் மணல் தொழில் செய்வீர்களோ இல்லையோ 15 நாட்களுக்கு ஒரு முறை வண்டிக்கு ரூ.20,000/- வீதம் மொத்தம் ரூ.1,20,000/-மும் பொங்கலுக்கு ரூ.25,000/-மும் ஆக மொத்தம் ரூ.1,45,000/-ஐ பணம் கொடுத்துவிடுங்கள் என்று கேட்டு தொந்தரவு செய்து வந்ததால், டிசம்பர் 2017-ல் ஆம்பூர் துணை காவல் கண்காணிப்பாளர் திரு. தன்ராஜ் அவர்களை அவருடைய வீட்டில் சென்று சந்தித்து, அவரிடம் தாங்கள் மணல் ஓட்டும் தொழிலை நிறுத்திவிட்டதாக கூறி கெஞ்சிய போது அதை அவர் நம்பாமல், உங்களை யார் மணல் தொழிலை விட சொன்னது தொடர்ந்து செய்யுங்கள் எந்த பிரச்சனையும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறியதாகவும், ஆனால் தாங்கள் அவர் கேட்ட பணத்தை கொடுக்காமல் இருந்ததால் S.I. லூர்து ஜெயராஜ் தங்களிடம் DSP ஐ நேரில் பார்க்க சொன்னதால் 16.1.2018-ந் தேதி DSP ஐ நேரில் பார்த்து பேசியபோது நான் கேட்ட பணம் எங்கே என்று கேட்டதாகவும், அதற்கு தாங்கள் மீண்டும் நாங்கள் அந்த தொழிலை செய்யவில்லை என்று கூறியதற்கு பணம் கொடுக்காவிட்டால் உங்களுடைய ஒரு வண்டி கூட உங்கள் ஊரில் ஓடாது இன்னும் 15 நாட்கள் டைம் தருகிறேன் 31.1.2018 அன்று நான் கேட்ட பணம் ரூ.1,45,000/-ஐ S.I யிடம் கொடுத்துவிடு என்று திட்டவட்டமாக கூறியதாகவும், ஆனால் தாங்கள் அந்த லஞ்சப் பணத்தை கொடுக்காததால் மீண்டும் பலமுறை DSP திரு. தன்ராஜ் அவர்கள் சொல்லி SI திரு.லூர்து ஜெயராஜ் லஞ்ச பணம் கேட்டு தங்களை தொந்தரவு செய்வதாகவும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று தனது

புகார் மனுவில் தெரிவித்திருந்தார். மேலும் 1.2.2018-ந் தேதி ஆம்பூர் முகால் லாட்ஜில் எங்களுக்கும் S.I திரு.லூர்து ஜெயராஜ்க்கும் இடையே நடந்த உரையாடல்களை வீடியோவும், 2.2.2018-ம் தேதி இரவு சுமார் 8.30 மணிக்கு ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் DSP அவர்கள் இருந்தபோது எங்களுக்கும் S.I திரு.லூர்து ஜெயராஜ்க்கும் இடையே நடந்த உரையாடல்களை குரல் பதிவும் இருந்த மெமரி கார்டை தன்னுடைய மனுவுடன் இணைத்துள்ளதாக கூறினார். அதன்படி மேற்படி புகார் மனுவின் நகலை இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதின்பேரில், சென்னை இயக்குநரக உத்தரவுப்படி PE 32/2018/POL/VL நாள்.07.02.2018-ந் தேதி 11.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டு, முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்ட விசாரணையின் தொடர்ச்சியாக, மேற்படி மெமரி கார்டை கணினியில் போட்டு வீடியோவை பார்க்க மற்றும் குரல் பதிவை கேட்க, அதில் மனுதாரர் கூறியிருந்ததை போல் S.I. திரு.லூர்து ஜெயராஜ் ஒரு லாரிக்கு ரூ.20,000/- என ஆறு லாரிகளுக்கு ரூ.1,20,000/-மும் பொங்கலுக்கு ரூ.25,000/-மும் ஆக மொத்தம் ரூ.1,45,000/-ம் பணம் புகார்தாரரிடமும் அவருடன் இருந்தவர்களிடமும் கேட்டது தெளிவாக பதிவாகி உள்ளது. மேலும் என்னுடைய தகவலாளர்களை தொடர்பு கொண்டும் நேரில் சந்தித்து எதிரிகளின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் எதிரிகள் சட்ட விரோத செயல்களை ஊக்குவிக்க லஞ்சமாக பணம் பெறுவது உறுதி செய்யப்பட்டது. எனவே, எதிரி திரு. தன்ராஜ், துணை காவல் கண்காணிப்பாளர், ஆம்பூர் உட்கோட்டம், வேலூர் மாவட்டம் மற்றும் எதிரி திரு.லூர்த் ஜெயராஜ், உதவி ஆய்வாளர், ஆம்பூர் நகர காவல் நிலையம், வேலூர் மாவட்டம் என்பவர் மீது 1988-ம் வருட ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் கீழ் வழக்கு பதிவுச் செய்ய முகாந்திரம் இருந்தமையால், சென்னை இயக்குநரக அனுமதிப் பெற்று, திரு.பன்னீர்செல்வம் (எ) ராஜ் என்பவர் கொடுத்த புகார் மனுவின் பேரில், இன்று 07.02.2018-ம் தேதி 19.00 மணிக்கு வேலூர் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு குற்ற எண்.3/2018 சட்ட பிரிவு 7, ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ன் கீழ் திரு. தன்ராஜ், துணை காவல் கண்காணிப்பாளர், ஆம்பூர் உட்கோட்டம், வேலூர் மாவட்டம் மற்றும் எதிரி திரு.லூர்த் ஜெயராஜ், உதவி ஆய்வாளர், ஆம்பூர் நகர காவல் நிலையம், வேலூர் மாவட்டம் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் திரு.பன்னீர்செல்வம் (எ) ராஜ், வயது.41/2018, த/பெ.சாமிநாதன், எண்.6, லக்ஷ்மி நகர், சாணாங்குப்பம் ஆம்பூர், வேலூர் மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: 05.02.2018 அனுப்புதல் பன்னீர்செல்வம் (எ) ராஜ், வயது.41/2018 த/பெ.சாமிநாதன் எண்.6, லக்ஷ்மி நகர் சாணாங்குப்பம் ஆம்பூர், வேலூர் மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகம் வேலூர். அய்யா, நான் பி.ஏ. எக்கனாமிக்ஸ் மற்றும் எம்.காம் படித்துள்ளேன் எனக்கு திருமணமாகி 2 பெண் குழந்தைகள் மற்றும் ஒரு ஆண் குழந்தை உள்ளனர். நான் ஆம்பூரில் உள்ள பெரியாங்குப்பம் மற்றும் சாணாங்குப்பம் ஆகிய இடங்களில் சொந்தமாக செங்கல் சூளை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் TN 37 BU 1612, TN 72 BB 2764 ஆகிய பதிவு எண் உள்ள இரண்டு லாரிகள் உள்ளது மேலும் TN 23 BU 4219 என்ற டிராக்டர் ஒன்றும் உள்ளது. நான் கடந்த 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டில் வேலூர் மாவட்டத்தில் உள்ள மாதனூர். கந்தனேரி மற்றும் வாலாஜா ஆகிய இடங்களில் உள்ள அரசின் உரிமம் பெற்ற மணல் குவாரியில் இருந்து முறையாக அரசு நிர்ணயம் செய்த பணம் யூனிட் ஒன்றுக்கு ரூ.2,000/- வீதம் 3 யூனிட் மணலுக்கு உரிய பணத்தை கட்டி பில்போட்டு மணல் எடுத்து அதனை என்னுடைய லாரியில் ஏற்றி ஆம்பூர் சுற்றுவட்டார பகுதிகளுக்கு எடுத்து சென்று வியாபாரம் செய்து வந்தேன். என்னைப் போலவே ஆம்பூர் பகுதியை சேர்ந்த சுதாகர் த/பெ.முத்து, சுரேஷ் (எ) சின்னபையன் த/பெ.தானிவேல்,

ஜெயபால் த/பெ.தேவராஜ், சேகர் த/பெ.பெருமாள் மற்றும் பாபு ஆகியவர்களும் மணல் குவாரிகளில் இருந்து மணல் ஏற்றி சென்று வியாபாரம் செய்துவந்தோம். நாங்கள் அனைவரும் மணல் விற்பனை செய்யும் தொழில் செய்துவந்த நிலையில் கடந்த 1 வருடமாக அரசு மணல் குவாரிகளை மூடிவிட்டதால் நாங்கள் அந்த தொழிலை நிறுத்திவிட்டோம். நான் நடத்தி வரும் செங்கல் சூளையில் இருந்து செங்கற்களை என்னுடைய லாரியில் ஏற்றி வியாபாரம் செய்து வருகிறேன். அதேபோல் ஆம்பூர் கன்னிகாபுரத்தை சேர்ந்த சுதாகர் என்பவர் மாங்காதோப்பு ஆயிஷா பீவி நகரில் ஹாலோ பிளாக் கற்களை உற்பத்தி செய்து அதனை அவருக்கு சொந்தமான லாரியில் ஏற்றி வியாபாரம் செய்து வருகிறார். அதேபோல் சுரேஷ் (எ) சின்னபையன் அவர்களும் ஹாலோ பிளாக் கற்களை விற்பனை செய்கிறார், ஜெயபால் என்பவர் வாட்டர் சர்வீஸ் கடை வைத்துள்ளார். நாங்கள் அனைவரும் மணல் விற்பனை செய்யும் தொழில் கடந்த 1 வருடமாக செய்வது கிடையாது. இன்னிலையில் சுமார் 8 மாதங்களாக ஆம்பூர் டி.எஸ்.பியாக உள்ள திரு.தன்ராஜ் என்பவர் ஆம்பூர் டவுன் போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் என்பவர் மூலம் கடந்த நவம்பர் மாதம் 2017 முதல் எங்களை பணம் கேட்டு தொந்தரவு செய்து வருகிறார். உங்கள் அனைவரிடமும் டிப்பர் லாரி மற்றும் லாரி உள்ளது நீங்கள் ஏற்கனவே மணல் விற்பனை செய்து வந்தவர்கள் இப்போது மணல் குவாரிகள் மூடிவிட்டதால் லைசன்ஸ் ஏதும் இல்லாமல் திருட்டுதனமாக மணல் வியாபாரம் செய்து வருகிறீர்கள் என்று எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது போலீசுக்கு பணம் கொடுத்துவிட்டு நீங்கள் அனைவரும் எவ்வளவு மணல் வேண்டுமானாலும் ஓட்டிக்கொள்ளுங்கள் இல்லை என்றால் உங்கள் மீது கேஸ் போட்டு உள்ளே தள்ளிவிடுவோம் என்று மிரட்டினார். அதற்கு நானும் மற்றவர்களும் சேர்ந்து மணல் கடத்தும் தொழிலை நாங்கள் செய்வது கிடையாது இல்லை என்றும் மணல் குவாரி மூடிய பின்னர் நாங்கள் இந்த தொழிலை செய்வது கிடையாது என்று சொன்னோம் ஆனால் எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் அதனை கேட்காமல் டி.எஸ்.பி சொல்லிவிட்டார் நீங்கள் மணல் தொழில் செய்வீர்களோ இல்லையோ அதுபற்றி எல்லாம் எனக்கு தெரியாது 15 நாட்களுக்கு ஒரு முறை 1 வண்டிக்கு ரு.20,000/- என்று 6 வண்டிக்கு 1,20,000/- கொடுத்துவிடுங்கள் இல்லை என்றால் செங்கல் வியாபாரமும் ஹாலோ பிளாக் கல் வியாபாரமும் செய்யமுடியாது நீங்கள் இந்த ஊரில் வாழ முடியாது என்றார். இது சம்மந்தமாக எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் அவர்கள் மூலம் கடந்த டிசம்பர் 2017 நாங்கள் அனைவரும் டி.எஸ்.பி திரு.தன்ராஜ் அவர்களை அவரது அலுவலகத்தில் உள்ள வீட்டில் சென்று சந்தித்து ஐயா, நாங்கள் இந்த தொழிலை செய்வது கிடையாது என்று கெஞ்சினோம் ஆனால் டி.எஸ்.பி அதனை ஏற்காமல் உங்களை யார் மணல் தொழிலை விட்டுவிட சொன்னது நீங்கள் மணல் வியாபாரத்தை தொடர்ந்து செய்யுங்கள் நான் எந்த பிரச்சனையும் வராமல் பார்த்துக்கொள்கிறேன் ஆனால் எஸ்.ஐ. சொன்னமாதிரி எனக்கு பணத்தை கொடுத்துவிடுங்கள் என்றார், நாங்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து போலீஸ் கேஸ் எல்லாம் எங்களுக்கு பழக்கமில்லை மறுபடியும் அரசு மணல் குவாரிகளை திறந்தால் இந்த தொழிலை செய்கிறோம் இல்லை என்றால் நாங்கள் எங்களுடைய மற்ற தொழில் மூலம் சம்பாதித்துக்கொள்கிறோம் சார் என்றோம், ஆனால் டி.எஸ்.பி அதனை ஏற்றுக்கொள்ளாமல் நீங்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை 1,20,000/- எனக்கு கொடுத்துவிடுங்கள் நீங்கள் திருட்டு மணல் ஏற்றி வியாபாரம் பார்த்துக்கொள்ளுங்கள் என்றார். வேறு வழிதெரியாமல் அங்கிருந்து வந்துவிட்டோம் மீண்டும் எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் அவர்களை பார்த்து சார் நாங்கள் ஏன் பணம் கொடுக்க வேண்டும் நாங்கள் தான் மணல் வியாபாரத்தை செய்வதுகிடையாதே என்றோம் அதற்கு அவர் அதெல்லாம் எனக்கு தெரியாது மணல் வியாபாரம் செய்பவன் அந்த தொழிலை விட்டுவிட்டேன் என்று சொன்னால் யாராவது நம்புவாங்களா நீங்கள் வேண்டும் மென்றால் கேட்ட பணத்தை உடனே கொடுத்துவிட்டு மீண்டும் வியாபாரம் செய்யுங்கள் உங்களை நாங்கள் ஏன்

கேட்கபோகிறோம் என்றார். ஆனால் அவர்கள் கேட்ட பணத்தை நாங்கள் கொடுக்கவில்லை அதனால் கடந்த 16.01.2018 அன்று எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் அவர்கள் போனில் என்னை அழைத்து ஒழுங்கு மரியாதையாக டி.எஸ்.பி. கேட்ட பணத்தை கொடுங்கள் அப்படி இல்லை என்றால் நீங்கள் டி.எஸ்.பி-யை நேரில் பார்த்து பேசிவிட்டு போங்கள் என்றார் அவர் சொன்னபடி 16.01.2018 அன்று டி.எஸ்.பி. திரு.தன்ராஜ் அவர்களின் ஆம்பூர் அலுவலகத்தில் உள்ள அவரது வீட்டிற்கு நானும் திரு.சேகர் என்பவரும் சென்று பார்த்தோம் அப்போதும் நான் கேட்ட பணம் எங்கே என்று கேட்டார் மீண்டும் நான் தொழில் செய்வது இல்லை யென்றேன் அதை நம்பாமல் நீ பணம் கொடுக்கவில்லை என்றால் உங்களுடைய ஒரு வண்டியும் இந்த ஊரில் ஓடாது இன்னும் 15 நாட்கள் உங்களுக்கு டைம் தருகிறேன் 31.01.2018 அன்று கடைசி தேதி அன்று 1,20,000/- பணமும் பொங்கல் போனஸ் ரூ.25,000/- ஆக மொத்தம் 1,45,000/-தை எஸ்.ஐ-இடம் கொடுத்துவிடு என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார். அதனால் 01.02.2018 அன்று எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் என்னையும் மற்றவர்களையும் அவர் தங்கியுள்ள ஆம்பூர் முகால் லாட்ஜிற்கு வந்து சந்திக்குமாறு தகவல் சொன்னார் அதனால் மதியம் சுமார் 12.00 மணிக்கு நானும், சுதாகர், சுரேஷ், ஜெயபால் மற்றும் சேகர் ஆகிய 5 பேரும் நேரில் சென்று எஸ்.ஐ திரு.லூர்து ஜெயராஜ் அவர்களை சந்தித்தோம் அப்போது 2 வண்டிக்கு உண்டான பணத்தை கொடுத்தால் டி.எஸ்.பி ஒத்துக்கொள்ளமாட்டார் அவர் கேட்ட பணத்தை கொடுத்தால் மட்டுமே அவரிடம் பேச முடியும் என்றார் அதன் பின்னர் 2.02.2018 மதியம் சுமார் 12.00 மணிக்கு S.I கூப்பிட்டதின் பேரில் முகால் லாட்ஜிற்கு கீழே உள்ள ரெஸ்டாரன்டில் எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் அவர்களை சந்தித்தோம் அப்போதும் 1 வண்டிக்கு 20,000/- மொத்தம் 6 வண்டிக்கு ரூ.1,20,000/- மற்றும் பொங்கலுக்கு ரூ.25,000/- கொடுத்துவிடுங்கள் உதாரணத்திற்கு ஒரு லோடு லாரி மணலுக்கு ரூ.1,000/- என்றால் ஒரு நாளுக்கு 10 லோடு ஓட்டினால் மாசம் ஒரு வண்டிக்கு மொத்தம் ரூ.3,00,000/- லட்சம் ஆகிறது உங்களால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது 1/2 மணி நேரம் இது சம்மந்தமாக டி.எஸ்.பி-யிடம் பேசிவிட்டேன் 2 வண்டிக்கு ஒத்துக் கொள்ளமாட்டேன் என்றார் அவர் பேசியதை திரு.சுதாகர் அவருடைய செல்போனில் வீடியோவாக பதிவு செய்தார். எஸ்.ஐ. பேசியதை கேட்டுக்கொண்டு வேறு வழிதெரியாமல் அங்கிருந்து அன்றைய தினம் வந்துவிட்டோம். பின்னர் மீண்டும் எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் 2.02.2018 அன்று பணம் கேட்டு தொந்தரவு செய்தார் டி.எஸ்.பி திரு.தன்ராஜ் அவர்களை நேரில் சந்திக்க ஏற்பாடு செய்வதாக சொன்னார் அவர் சொன்னதின் பேரில் நான், திரு.சுதாகர், திரு.சுரேஷ் திரு.ஜெயபால் ஆகிய நான்கு பேரும் இரவு சுமார் 8.30 மணிக்கு ஆம்பூர் டவுன் போலீஸ் ஸ்டேஷன் வர சொன்னதால் நாங்கள் அனைவரும் அங்கு சென்றோம் போலீஸ் ஸ்டேஷனில் டி.எஸ்.பி திரு.தன்ராஜ் அவர்கள் இன்ஸ்பெக்டர் ரூமில் உட்கார்ந்து இருந்தார், எஸ்.ஐ. திரு.லூர்து ஜெயராஜ் போலீஸ் ஸ்டேஷன் ஹாலில் உட்கார்ந்திருந்தார். எங்களை டி.எஸ்.பி-யை சந்திக்கவிடாமல் அவர் உங்களை பார்க்க விரும்பவில்லை பணம் கொடுங்கள் அதனை எடுத்துக்கொண்டு அவரை சந்திக்கலாம் என்றார், அதற்கு நான் பணம் இல்லை சார் நாங்கள் அவரிடம் காலில் விழுந்தாவது மன்னிப்பு கேட்கிறோம் அவரிடம் முதலில் பேசலாம் எவ்வளவு பணம் அவ்வளவு பணம் எங்களிடம் இல்லை என்றோம் அதற்கு டி.எஸ்.பி கோபப்படுவார் நீங்கள் சொல்வதை எல்லாம் நான் அவரிடம் போய் சொல்லமுடியாது என்றார் மேலும் நீங்கள் பணம் எடுத்து வந்திருப்பதாக அவரிடம் சொல்லிவிட்டேன் இப்பா வந்து பணம் இல்லை என்றால் எப்படி, என்னை அசிங்கபடுத்தீர் என்றார் அந்த நேரத்தில் D.S.P.-யிடம் பேசிக்கொண்டு இருந்த டவுன் இன்ஸ்பெக்டர் திரு.சீனிவாசன் அவர்கள் வெளியே வந்து ஏம்பா கடன் வாங்கியாவது அவர் கேட்ட பணத்தை கொடுத்துவிடுங்கள் என்றும் பணம் கேட்பது சம்மந்தமாகவும்

பணம் ரு.1,20,000/- மற்றும் பெஸ்ட்டிவல் செலவு ரு.25,000/- என்றும் உள்ளே போய் சொல்லட்டுமா என்று சில நிமிடங்கள் எங்களிடம் பேசிவிட்டு ஏன் D.S.P.-யை டென்ஷன் செய்கிறார்கள் என்று சொல்லிவிட்டு மீண்டும் D.S.P இருந்த ரூமிற்கு சென்றுவிட்டார், S.I. திரு.லூர்து ஜெயராஜ் அவர்கள் D.S.P கேட்ட பணத்தை கொடுக்காமல் ஒன்றும் செய்யமுடியாது 1,20,000/- மற்றும் பொங்கலுக்கு ரு.25,000/- மொத்தம் ரு.1,45,000/- கொடுத்துவிடுங்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை 1,20,000/- கொடுத்துவிட்டு நீங்கள் மணல் ஓட்டுங்கள் உங்களை யாரும் கேட்கமாட்டார்கள், நீங்கள் தொழில் செய்யவில்லை என்றாலும் 15 நாளைக்கு ஒரு முறை பணம் ரு.1,20,000/- கொடுக்க வேண்டும் என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார். D.S.P ஊருக்கு போகிறார் என்று அவருக்கு நிறைய செலவு உள்ளதாம் பணத்தை எடுத்துக்கொண்டு உடனே வந்து கொடுங்கள் என்று சொல்லி எங்களை அனுப்பிவிட்டார் நடந்த வற்றை சுதாகர் அவருடைய செல்போனில் உள்ள மெமரி கார்டில் ஆடியோவாக பதிவு செய்து வைத்துள்ளார். ஆம்பூர் டி.எஸ்.பி திரு.தன்ராஜ் மற்றும் ஆம்பூர் டவுன் S.I திரு.லூர்து ஜெயராஜ் எங்களை மிரட்டி மணல் கடத்தல் தொழிலை செய்ய வற்புறுத்தி லஞ்சமாக எங்களிடம் கேட்டிருக்கும் பணம் ரு.1,45,000/- தை கொடுத்து மணல் கடத்தல் தொழில் செய்ய எங்கள் 5 பேருக்கும் விருப்பம் இல்லாத காரணத்தாலும் அரசு மணல் குவாரிகளை முடிவிட்ட நிலையில் அந்த தொழிலை செய்ய விரும்பாமல் எங்களிடம் லஞ்ச பணம் கேட்கும் D.S.P ஆம்பூர் மற்றும் திரு.லூர்து ஜெயராஜ் ஆம்பூர் டவுன் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் என் சொந்த வேலையாகவும் உடல் நிலை சரி இல்லாத காரணத்தினாலும் 2 நாட்கள் ஊரிலேயே இருந்து விட்டு இன்று 5.02.2018 மனு கொடுக்கிறேன் மேலும் S.I திரு.லூர்து ஜெயராஜ் பேசிய விவரங்களை சுதாகர் மூலம் பதிவு செய்து உள்ள 8 ஜி.பி. மெமரி கார்டையும் மனுவுடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, (SD/XXX) S.Panneerselvam.

Sir,

i. Received the complaint on 05.02.2018 at 12.00 hrs., and the same was forwarded to the Directorate of Vigilance and Anti-Corruption, Chennai on 05.02.2018 at 12.30 hrs. Sd/-xxxxx S.Vijayalakshmi, 05/02/2018 Inspector of Police, Vigilance & Anti Corruption, Vellore.

ii. On the order of DVAC, Chennai, A Preliminary Enquiry in PE 32/2018/POL/VL, dt.07.02.2018 was registered, on 07.02.2018 at 11.00 hrs. Sd/-xxxxx S.Vijayalakshmi, 07/02/2018 Inspector of Police, Vigilance & Anti Corruption, Vellore.

iii. On the outcome of the preliminary enquiry and after obtaining concurrence from DVAC, Chennai a case in Vigilance and Anti-Corruption, Vellore Detachment Cr. No. 03/2018, u/s. 7 of P.C.Act-1988 was registered on 07.02.2018 at 19.00 hrs. Sd/-xxxxx S.Vijayalakshmi, 07/02/2018 Inspector of Police, Vigilance & Anti Corruption, Vellore.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு மற்றும் புகார்தாரர் புகார் மனுவுடன் கொடுத்த Transton 12/17 MICRO SD HC 8 GB மெமரி கார்டு ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொள்ளப்பட்டது.

S. Vijayalakshmi
7/2/18